இக்கூறுகளைக் கருத்திற்கொண்டு, டாக்சி கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 80 காசாக உயர்த்தப்பட்டது. குறைந்த அளவுக் கட்டணம் ரூ. 1.50 என்றும் நிச்சயிக்கப்பட்டது. உயர்த்தப்பட்ட இக்கட்டணம் 4—11—1973 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. அவ்வண்ணமே, மாநில போக்குவரத்து அதிகாரமன்றத்திற்கு வரைவுக் கட்டளை ஒன்று அனுப்பப்பட்டது. இக்கட்டளை உறுதிப்படுத்தப்படும்வரையில், மேற்சொன்ன விதங்கள் 4—11—1973 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவரப்பட்டன. தற்போதைய விலை வாசியைக் கருத்தில் கொண்டு பார்த்தால், அரசு அறிவித்துள்ள விதங்கள் போதுமானவையல்ல என்று டாக்சி உரிமையாளர்கள் இப்பொழுது முறையிட்டுள்ளனர். பொது மக்களிடமிருந்து வரக்கூடிய முறையீடுகள், கருத்துரைகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டு, இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. என். டென்னிஸ்: மாநகராட்சி போன்ற பெரிய நகரங்களில் நெரிசல் நேரங்களில் சாதாரண பஸ்களைவிட சற்று ஹயர் ரேட்டோடு கூடுதலான வசதியுள்ள லக்ஸரி கோச் வசதி செய்வது இதற்கு ஒரு பரிகாரமாக இருக்கும், எனவே இதுபற்றி ஆலோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பது ஒரு நல்ல யோசனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், 1973-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்.

4. நடைமுறைக் கேள்வி

ஓர் அவசரச் சட்டத்தை திருத்தங்களுடன் சட்ட முன்வடிவாகக் கொண்டு வருவது முறைதானா என்பது குறித்து

Dr. H. V. HANDE : Sir, I rise on a point of order. Now the Hon. Minister for Local Administration has been called by you to move a motion to seek the permission or approval of the House to introduce the Bill.

1973 நவம்பர் 24] *[டாக்டர் எச். வி. ஹாண்டே]*

I want to submit certain points for the consideration of the Hon. Speaker and Hon. House. In view of the fact that the Hon. Chief Minister has already announced in this House on the 20th November 1973—if I remember aright—that the Madras Corporation will be superseded. After that announcement by the Hon. Chief Minister, this Bill has been brought before the House to replace the Ordinance issued by the Governor. After the Hon. Chief Minister has announced in this House on the 20th that the Madras Corporation will be superseded, I want to know whether this Bill is valid. I want the House to consider this valid point.

Even at the introduction stage under extraordinary circumstances, the hon. Members are allowed to air their views on the subject. There are precedents also. In the previous Ministry or in previous occasion, we have referred to it. I would request the Hon. Minister to consider the following points :

The Governor issued the Ordinance on the 6th October 1973—if I remember aright—when the House was prorogued. After 6th October 1973, on the 20th November 1973, the Hon. Chief Minister announced in this House that the Madras Corporation will be superseded. According to the announcement of the Hon. Chief Minister, the Madras Corporation ceases to exist. The Corporation has to be run on an *ad hoc* basis by the Commissioner. In the statement of Objects and Reasons, it has been mentioned that this Bill is to replace the Ordinance already issued by the Governor. When the Corporation has been superseded, I do not know how can the House replace the Ordinance. Therefore, it is beyond the competence of the House. The introduction of the Bill itself is in question. I therefore request the Hon. Minister to consider that point also. In paragraph 2, it has been stated that in pursuance of the Chief Minister's announcement in the Assembly on 20th November 1973, it has been decided not to continue the present term of office of the Councillors of the Municipal Corporation of Madras beyond 30th November 1973. It has not been clarified here whether the Hon. Chief Minister's statement that the Corporation of Madras will be superseded with effect from 20th November 1973 is valid or not. If a Bill is

passed and if it becomes an enactment with such a lacuna or fault, we, the members of the Legislature, will become the laughing stock before the public.

The Bill has been hastily drafted by the Department. When the Chief Minister announced that the Madras Corporation will be superseded, hastily one or two sentences have been added to the Objects and Reasons already incorporated in the Bill. Only one or two sentences have been changed. We do not know whether the Councillors of the Madras Corporation cease to be Members after 20th November 1973 or after 30th November 1973. That is a matter under dispute. That should also be clarified. According to the announcement made by the Hon. Chief Minister the Mayor, Councillors all ceased to be members of the Corporation on and from 20th November 1973. We should also consider, that in view of the above circumstances, is it necessary for the Hon. Minister for Local Administration to introduce the Bill here.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பற்றி ஒரு ஒழுங்குப் பிரச்னை கிளப்பப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் பேசும்பொழுது மிக கவனமாக வார்த்தைகளெல்லாம் சொல்லியிருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மாநகராட்சி கலைக்கப்படும், இனிமேல் அது நடைபெறாது. அதைச் சட்டப்படி, முறைப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. அவசரச் சட்டம் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இன்றைக்கு சட்டமாக இருக்கிறது. சட்டப்படி அக்டோபர் 31-ம் தேதியோடு முடிந்திருந்த மாநகராட்சி பே மாதம் வரையிலும் அதற்குக் காலம் நீடித்து அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அவசர சட்டத்திற்குப் பதிலாக இங்கே ஒரு சட்டம் இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் கொண்டுவரப்படும்பொழுது இந்த அரசாங்கத்தின் கொள்கை என்னவோ அந்தக் கொள்கை அப்படியே பிரதிபலிக்கிற முறையில் சட்டம் கொண்டு வரப்படும். அவசரச்

1973 நவம்பர் 24] [திரு. செ. மாதவன்]

சட்டத்திற்கும், இதற்கும் முரண்பாடு இருப்பதில் தவறு இல்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை நாம் பார்த்தால் நவம்பர் 30-ம் தேதி வரையில் அந்த மன்றம் இருக்கும். அதற்குப் பின்னுலே அந்த மன்றம் இருக்காது என்ற அதிகாரத்தை நம்முடைய அரசு இதிலே எடுக்க இருக்கிறது. ஆகவே, இதில் எந்தவிதமான முறைகேடோ, தவறோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : Actually we have got a right to oppose the Bill at the time of introduction of the Bill. பில் காப்பி எங்களுக்கு முன்னுல் கொடுப்பது வழக்கம். ஆர்டினன்ஸை சட்டமாக்குவதற்கு பில் கொண்டு வரப்படுகிறது. பில் கொண்டுவராவிட்டால் ஆர்டினன்ஸ் லாப்ஸ் ஆகிவிடும். ஆகவே இந்த மசோதாவைக் கொண்டு வந்து இங்கே பிரேரேபிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அரசின் கொள்கை வரையறுக்கப்பட்டுவிட்டது. அதற்குத் தகுந்த சட்டம் கொண்டுவர வேண்டும். ஆர்டினன்ஸை எப்படியாவது சட்டமாக்கவேண்டும் என்று என்ன நியதி இருக்கிறது? சட்டம் கொண்டுவராவிட்டால் ஆர்டினன்ஸ் லாப்ஸ் ஆகிவிடும். அவ்வளவுதான். அந்தக் கொள்கையில் பாதி, இந்தக் கொள்கையில் பாதி என்று கொண்டுவருவதால் அது இந்தச் சபைக்கு எப்படி உதவப் போகிறது?

Therefore, at this introduction stage, we have got a right to oppose it.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆர்டினன்ஸ் போடும்பொழுது மே வரையில் நீடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் போடப்பட்டது. இப்பொழுது சில வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகளின் காரணமாக அரசாங்கம் கார்ப்பரேஷனைக் கலைப்பது எனறு முடிவு எடுத்திருக்கிறது. ஆர்டினன்ஸை சட்டமாக்க பில் கொண்டு வர வேண்டிய அவசியம்' என்ன ?

Under Rule 124 of the Assembly Rules, the Hon. Minister can withdraw the Bill அந்த பில்லை வாபஸ் வாங்கவேண்டும். இப்பொழுது அரசின் கொள்கை என்னவோ, அதையே பில்லாகக் கொண்டு வருவதில் தவறு கிடையாது. ஆர்டினன்ஸ் போட்ட பொழுது இருந்த எண்ணமே வேறு. இப்பொழுது நிலைமை

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 நவம்பர் 24

தலைகீழாக மாறி இருக்கிறது, மாறுபட்ட சூழ்நிலையில் பழைய ஆர்டினன்ஸை சட்டமாக்க ஒரு பில் கொண்டுவந்து விடுகிறோம் என்று சொல்வது நியாயமாக இருக்காது. இப்பொழுது சூழ்நிலை மாறிவிட்டது.

They can bring a fresh Bill again to be considered by the House. The Hon. Minister can withdraw the Bill under Rule 121 of the Assembly Rules.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எனக்கு இது சரியாகப் புரிய வில்லை. மசோதா கொண்டுவரும்போதே இப்படித்தான் கொண்டு வந்திருக்கிறோம். புதிய மசோதா தான் கொண்டுவரப்பட்டிருக் கிறது. இதை வாபஸ் செய்து விட்டு, வேறு ஒன்றைக் கொண்டு வரவேண்டுமென்ற அவசியம் இல்லை. சட்டம் தனியாக இருக் கிறது. இதைக் கைவிட்டுவிட வேண்டுமென்றால் மாநகர மன்றம் என்ன ஆகும் என்பதை, யோசித்துப் பார்க்க வேண்டும். இந்த மசோதாவிலே நாம் நவம்பர் 30-ந் தேதி வரையில் மாநகர மன்றம் நடைபெறும்; அதற்குப் பிறகு ஸ்பெஷல் ஆபீசர் போடப்படுவார் என்று இருக்கிறது. அந்த அதிகாரியினுடைய அதிகாரம் என்ன என்பதையும் சொல்லியிருக்கிறோம். இந்த மசோதா புதிய மசோதாதான். இதில் தவறு இல்லை. ஆகவே, வேறு ஒரு மசோ தாவைக் கொண்டுவரவேண்டியதில்லை. பழைய மசோதாவில் மே வரையில் மாநகர மன்றம் இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். புதிய மசோதாவில் நவம்பர் 30-ந் தேதி வரையில் இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். ஆக, பழைய மசோதாவுக்கும் புதிய மசோ தாவுக்கும் சட்ட ரீதியில் முரண்பாடு எதுவும் இல்லை. ஆகவே, இந்த மசோதாவை கைவிட வேண்டிய அவசியம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: There is no point of order.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1973-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 1973-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.